# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

******

முறையீட்டு மனு எண்: 166/2019/மா
ஆணை நாள்: 17–02–2020

திரு . V. இராஜசேகர்,
**பட்டாபிராம், சென்னை – 600 072.** – முறையீட்டு மனுதாரர்

**ஆணையர்,**
**ஆவடி மாநகராட்சி.** – எதிர் மனுதாரர்

சென்னை – 72, பட்டாபிராம், சார்லஸ் நகர், எண்.06, என்ற முகவரியில் வசிக்கும் திரு. V இராஜசேகர் என்பவரது 02.11.2019 நாளிட்ட மனு 04.11.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண்.166/மா/2019 என எண்ணிடப்பட்டு, விசாரணை மேற் கொள்ளப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை:**

முறையீட்டு மனுதாரர் திரு. V. இராஜசேகர் என்பவர் தனது 02.11.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில் சென்னை பட்டாபிராம் சென்னை திருப்பதி நெடுஞ்சாலை (CTH) சாலையை ஆக்கிரமித்து, வாகனங்கள் கூட நிறுத்த கூட இடமில்லை விதி மீறி கட்டப்பட்டுள்ள திருமண மண்டபங்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு ஆவடி மாநகராட்சிக்கு புகார் மனு அனுப்பியிருந்தும் இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், நடவடிக்கை எடுக்க மாநகராட்சிக்கு உத்திரவிட கோரியுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 11.11.2019 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது 13.12.2019 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள புகார் தொடர்பான 07.09.2019 அன்று தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றும், அப்போது 12 திருமண மண்டபங்கள் விதிமீறி கட்டப்பட்டுள்ளது என்பது கண்டறியப்பட்டது என்றும் இத்திருமண மண்டபங்கள் 8 முதல் 30 ஆண்டுகள் பழமையான கட்டடங்களாகும் என்றும், மேற்படி அனைத்து திருமண மண்டபங்களுக்கும் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 – பிரிவு 56 (ம) 57ன் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது என்றும்; அதன் நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது என்றும், இப்பொருள் குறித்து உரிய சட்டத்திற்குட்பட்டு உரிய கால அவகாசம் அளித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறதென்று தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 14.11.2019 நாளிட்ட அழைப்பிணையின்படி, முறையீட்டு மனுதாரர் 19.12.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் 2.11.2019 நாளிட்ட புகார் மனு என்னால் அனுப்பப்பட்டது என்றும், இதே புகார் சம்மந்தமான 07.09.2019ல் சென்னை வளர்ச்சி குழுமத்திற்கு, ஒரு மனு அனுப்பப்பட்டது என்றும், சென்னை பெருநகர் பட்டாபிராமில், சென்னை திருப்பதி நெடுஞ்சாலையில் சாலையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள திருமண மண்டபங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மேலும் அக்கட்டிடங்களுக்கான கட்டிட அனுமதியை பரிசோதிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இம்முறைமன்ற நடுவத்தின்14.11.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 19.12.2019 அன்றும் மற்றும் 30.12.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 04.02.2020 அன்றும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்க ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. இவ்விரு தினங்களிலும் ஆவடி மாநகராட்சி ஆணையர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. மேற்படி தினங்களில் ஆய்வு கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியுள்ளதால் விசாரணைக்கு நகரமைப்பு அலுவலர் ஆஜராக தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, விசாரணையின்போது அளித்த வாக்குமூலம் மற்றும் ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. ஆணையரின் அறிக்கை ஏற்கப்பட்டு, அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு விதி மீறல் திருமண மண்டபங்கள் மீது உரிய விதிமுறைகளின்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள ஆவடி மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020-ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 17-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, இவ்வலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலர் 20-2-20

பெறுநர்
திரு . V. இராஜசேகர்,
எண்.06, M.G.R. தெரு,
சார்லஸ் நகர்,
பட்டாபிராம், சென்னை – 600 072.

ஆணையர்,
ஆவடி மாநகராட்சி,
ஆவடி, சென்னை – 600 054.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதரி